# நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர்!



**13.03.2026 நிகழ்வுகள்**

## கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகள்!

### 1. திரைப்பட தணிக்கை வாரியத்தின் ஆண்டறிக்கை சமர்பிக்கப்படாதது ஏன்?

**திருச்சி சிவா**



தகவல் மற்றும் ஒளி பரப்பு அமைச்சகத்தின் ஆண்டறிக்கையில், மத்திய திரைப்படச் சான்றிதழ் வாரியத்தின் (CBFC) ஆண்டறிக்கை விவரங்கள் சேர்க்கப்படாமல் இருப்பதற்கான காரணங்கள் குறித்து பதிலளிக்குமாறு திமுக மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா கேள்வி எழுப்பியுள்ளார். கடந்த ஐந்து ஆண்டுகளில் வாரியத்தால் நடத்தப்பட்ட கூட்டங்கள் குறித்த விவரங்கள், தற்போதைய வாரிய உறுப்பினர்கள் குறித்த விவரங்கள் மற்றும் வாரியத்தில் உள்ள பெண்களின் எண்ணிக்கை, வாரியத்தின் பதவியில் இருந்த இரண்டு உறுப்பினர்களின் மறைவிற்குப் பிறகு, நியமிக்கப்பட்ட வாரிய உறுப்பினர்கள் விவரங்கள், 2017ஆம் ஆண்டில் வாரியத்தின் பதவிக்காலம் முடிவடைந்த பிறகு, வாரியத்தை மறுசீரமைப்பதில் ஏற்பட்ட தாமதத்திற்கான காரணங்கள்? என பல்வேறு கேள்விகளையும் அவர் கேட்டுள்ளார்.

### 2. சீன ரோபோவை தனது சொந்த கண்டுபிடிப்பாக ஏமாற்றிய கல்கோசியா பல்கலைகழகத்தின் மீது நடவடிக்கை என்ன?

**பி. வில்சன்**



2026 இந்திய செயற்கை நுண்ணறிவின் தாக்கம் குறித்த உச்சி மாநாட்டில் பங்கேற்றவர்களின் விவரங்களை பரிசோதித்தல் மற்றும் சரிபார்த்தல் அளவுகோல்களில் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள் என்ன என்றும் சீனாவில் தயாரிக்கப்பட்ட யூனிட்ரீ கோ2 ரோபோ நாயை தனது சொந்த கண்டுபிடிப்பாக அறிமுகப்படுத்தி ஏமாற்றிய கல்கோசியா பல்கலைக்கழகத்தின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும் திமுக மாநிலங்களவை உறுப்பினர் பி. வில்சன் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். அத்தோடு உச்சிமாநாட்டிற்கான இந்திய அரசு இம்மாநாட்டிற்காக செய்த மொத்த செலவு குறித்தும் அறிக்கை வெளியிட கேட்டுள்ளார்.

### 3. சட்ட அமைப்பை இந்திய மயமாக்கும் கோரிக்கை மீதான செயல்திட்டம் என்ன?

**செல்வகணபதி**



சட்ட அமைப்பை இந்தியமயமாக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது குறித்து திமுக சேலம் மக்களவை உறுப்பினர் செல்வகணபதி கேள்வி எழுப்பியுள்ளார். இந்திய தேசிய சட்ட ஆணையம் இதை முன்மொழிகிறதா? இது தொடர்பாக நிபுணர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில அரசுகள் உள்ளிட்டோரின் கருத்துக்களைப் பெற அரசு பரிசீலித்து வருகிறதா? என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 4. விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த போதுமான நிதி வழங்குகிறதா ஒன்றிய அரசு?

**எஸ்.ஆர்.சிவலிங்கம்**





2026-27ஆம் ஆண்டிற்கான ஒன்றிய பட்ஜெட்டில் விவசாயிகளின் முக்கிய பிரச்னைகளான நிலையற்ற வருமானம், பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் நெருக்கடிகள் மற்றும் அதிகரித்து வரும் செலவுகள் ஆகியவற்றைச் சமாளிப்பதற்கு நிதி உதவி செய்ய போதிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என திமுக மாநிலங்களவை உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார். சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு உண்டாகும் பயன்கள் பற்றிய ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளதா? மற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை? என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 5. தமிழ்நாட்டிலிருந்து தாக்கல் செய்யப்பட்ட புவிசார் குறியீடு (GI) விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளது ஏன்?

**ஆர். கிரிராஜன்**

**டாக்டர் கனிமொழி சோமு**





தமிழ்நாட்டிலிருந்து தாக்கல் செய்யப்பட்ட புவிசார் குறியீடு (GI) விண்ணப்பங்களின் தற்போதைய நிலை குறித்து திமுக மாநிலங்களவை உறுப்பினர்கள் கிரிராஜன் மற்றும் கனிமொழி சோமு கேள்வி எழுப்பியுள்ளனர். 2021ஆம் ஆண்டிலிருந்து, ஆண்டுவாரியாகவும் விண்ணப்பவாரியாகவும், தமிழ்நாட்டிலிருந்து தாக்கல் செய்யப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட புவிசார் குறியீடு விண்ணப்பங்கள் குறித்த விவரங்கள் மற்றும் கடந்த நான்கு ஆண்டுகளில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டு, புவிசார் குறியீடு வழங்க மறுக்கப்பட்டவற்றின் பட்டியல் மற்றும் அதற்கான காரணங்கள் யாவை? என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

### 6. கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு தடையில்லா மகப்பேறு சலுகைகள் வழங்குக?

**ஈஸ்வரசாமி**



பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா (PMMVY) இன் கீழ் வழங்கப்படும் மகப்பேறு சலுகைகளை தடையில்லாமல் அனைத்து கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் அமல்படுத்தப்பட வேண்டும் என பொள்ளாச்சி திமுக மக்களவை உறுப்பினர் ஈஸ்வரசாமி நாடாளுமன்றத்தில் கேட்டுள்ளார். கடந்த மூன்று நிதியாண்டுகளில், இத்திட்டத்தின்கீழ் பயனடைந்தோரின் விவரங்கள், ஒதுக்கீடு செய்யப்பட்ட அல்லது விநியோகிக்கப்பட்ட நிதிகள் குறித்த விவரங்கள் என்ன? சலுகைகளை விநியோகிப்பதில் ஏற்படும் தாமதங்கள் மற்றும் ஆதார் சார்ந்த சரிபார்ப்புச் சிக்கல்கள் ஆகியவை தகுதியுள்ள பெண்களைப் பாதிக்கின்றன என்கிற குற்றச்சாட்டு குறித்து நடவடிக்கை என்ன? விண்ணப்பிக்கும் நடைமுறைகளை எளிமைப்படுத்தவும், டிஜிட்டல் அமைப்புகளை வலுப்படுத்தவும், கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளைச் சேர்ந்த பெண்கள் உட்பட தகுதியுள்ள அனைவருக்கும் சலுகைகள் உரிய நேரத்தில் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்யவும் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 7. நாள்பட்ட சுவாச நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முறையான சிகிச்சை மற்றும் நிவாரணம் வேண்டும்?

**ராணி ஸ்ரீகுமார்**



நாள்பட்ட சுவாச நோய்களின் பரவுதல், இறப்பு விகிதங்கள் குறித்து அரசு ஆய்வுகள் மேற்கொண்டு கண்காணிக்கிறதா என்று திமுக தென்காசி மக்களவை உறுப்பினர் டாக்டர். ராணி ஸ்ரீகுமார் கேள்வி எழுப்பியுள்ளார். புகையிலை பயன்பாடு, உயிரி எரிபொருட்களால் ஏற்படும் காற்று மாசுபாடு, பணிசார்ந்த சூழலினால் ஏற்படும் பிரச்னைகள் மற்றும் கோவிட்19 னால் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் இந்நோய்களின் பாதிப்பு அதிகரிப்பதற்கு காரணமாக இருக்கின்றனவா? நாடு முழுவதும் உள்ள ஆரம்ப, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை சுகாதார நிலையங்களில், COPD மேலாண்மைக்கான போதுமான உள்கட்டமைப்புகள் (ஸ்பைரோமெட்ரி போன்ற நோயறியும் வசதிகள், நுரையீரல் மறுவாழ்வு சேவைகள், அத்தியாவசியமான மருந்துகள் மற்றும் ஆக்சிஜன் வசதி உள்ளிட்டவை) உறுதி செய்யப்பட்டுள்ளனவா? COPDயை திறம்பட நிர்வகிப்பதற்காக, நோயை முன்கூட்டியே கண்டறிதல், சமூக அளவிலான பரிசோதனைகள், பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல், தடுப்பு உத்திகள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகியவற்றை வலுப்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? COPD தொடர்பான நோய் பாதிப்பு, இறப்பு விகிதம், நோயாளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் மீதான நிதிச்சுமையை குறைப்பதற்காக, அரசாங்கம் வகுத்துள்ள திட்டங்கள், வழிகாட்டுதல்கள், நிதி ஒதுக்கீடுகள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் குறித்த விவரங்கள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

---

சமையல் கேஸ் சிலிண்டருக்கும் – வணிக ரீதியிலான கேஸ் சிலிண்டருக்கும் தட்டுபாடு! ஒன்றிய அரசைக் கண்டித்து

# மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும் ஒன்றிய - நகர - பேரூரில் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

மயிலாடுதுறை, மார்ச் 15 -

மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் - பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை, அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை, ஒன்றிய பா.ஜ.க. என்.டி.ஏ. அரசின் தவறான வெளியுறவுக் கொள்கையினாலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததன் விளைவாகவும் இன்று நாடு முழுவதும் சமையல் கேஸ் சிலிண்டருக்கும் - வணிக ரீதியிலான கேஸ் சிலிண்டருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் அவதியுற்று வருகின்றனர்.

உணவகங்கள், வணிக நிறுவனங்கள் சரிவர இயங்க முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது. சிறுகுறு தொழில்கள் உள்ள அதிக தொழில்வளமிக்க தமிழ்நாடு இந்த கடுமையான பாதிப்பை சந்திக்கும் என்பதால் ஒன்றிய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து நிலைமையை சரிசெய்ய வேண்டும் என முதலமைச்சர் அவர்கள் பிரதமர் மோடி அவர்களுக்கு கடிதம் வாயிலாக வலியுறுத்தி இருந்தார். ஆனால் தற்போது வரை மக்களிடையே நிலவும் அச்சத்தைப் போக்கி நிலைமையை சீராக்க முறையான நடவடிக்கை எடுக்கவில்லை ஒன்றிய அரசு. நாடாளுமன்றத்தில் இதைப் பற்றி பேசவே பிரதமர் மறுத்து வருகிறார்.

அதோடு தமிழ்நாட்டிற்கான கல்விநிதி, நூறு நாள் வேலை திட்ட நிதி, குடிநீர் இணைப்பு நிதி என எந்த நிதியையும் ஒதுக்காமல் நிறுத்தி வைத்திருப்பது. கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டம், ஒசூர் விமான நிலையம் என எந்த வொரு வளர்ச்சித் திட்டத்திற்கும் அனுமதி தராமல் முட்டுக்கட்டை போட்டு வருவது.

மும்மொழி திணிப்பு என்ற பெயரில் தமிழ்மொழியை அழிக்க துடிப்பது, கீழடி அகழ்வாய்வு முடிவுகளை ஏற்க மறுப்பது என தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. இப்படி தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் என்.டி.ஏ. அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து 'மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி' சார்பில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" தலைமைக் கழகம் அறிவித்துள்ளவறு மயிலாடுதுறை மாவட்டத்திலுள்ள ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் இன்று 15.03.2026 - ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு மத சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள் தலைமையிலும், கூட்டணி கட்சிகளின் தலைவர்களின் முன்னிலையிலும் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறுகிறது.



மயிலாடுதுறை நகரத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் ஆகிய எனது தலைமையிலும், நகரக் கழக செயலாளர் குண்டாமணி ( எ ) என். செல்வராஜ் மற்றும் கூட்டணிக் கட்சி தலைவர்கள் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள், நகர்மன்ற, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள், உறுப்பினர்கள், கழகத்தினர் பெரும் அளவில் கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டும்.

மேலும் ஆர்ப்பாட்டத்திற்கான ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் சிறப்பாக செய்திட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ. கூறியுள்ளார்.

---

## தி.மு.க. வழக்கறிஞர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. வழக்கறிஞர் அணிச் செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணியின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருப்பூர் தெற்கு மாவட்டம்

தலைவர் சி. நடராஜன் 22/176, சிவசுப்பிரமணியம், ஏரிப்பாளையம், உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் க. ராஜேஷ் மணி 4/120ஏ, தளி ரோடு, பள்ளபாளையம், உடுமலைப்பேட்டை - 642112, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் டி.எஸ். பொன்ராஜ் 1/247, சித்தாண்டிஸ்வர் கார்டன், ஏரிப்பாளையம், உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் 1) இரா. மகேஸ்வரன் 506ஏ, குமரன் வீதி, காரத்தொழுவு அஞ்சல், மடத்துக்குளம் - 642238, திருப்பூர் மாவட்டம். 2) எம். இந்திரகலை நாச்சியார் 1, தாஜ் ஹோட்டல், கச்சேரி தெரு, உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம். 3) வெ. சக்திவேல் 1/295, குமணன் வீதி, குமரலிங்கம், மடத்துக்குளம் - 642204, திருப்பூர் மாவட்டம். 4) எஸ்.ஆர். மோகன் சங்கர் 16/59, செங்கங்டிப்புதூர், வேடபட்டி, மடத்துக்குளம் - 642203, திருப்பூர் மாவட்டம். 5) நா. நாகமாணிக்கம் 230, கழுகரை, மடத்துக்குளம் - 642113, திருப்பூர் மாவட்டம்.

### திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்

தலைவர் கோ. சாமுவேல் பாஸ்கர்ராஜ் 8/8, பாகைநேரி, பாப்பான்குளம் அஞ்சல், நாங்குநேரி தாலுக்கா - 627110, திருநெல்வேலி.

துணைத் தலைவர் க. தவசிராஜன் அருணா கட்டிடம், இராதாபுரம் ரோடு, வள்ளியூர் - 627117, திருநெல்வேலி.

அமைப்பாளர் கே. பாலச்சந்தர் 62, மெயின் ரோடு, மூன்றடைப்பு, நாங்குநேரி தாலுக்கா - 627152, திருநெல்வேலி.

துணை அமைப்பாளர்கள் 1) எல். சுப்பிரமணியன் 75/28, தேவர் கீழத் தெரு, வள்ளியூர் - 627117, திருநெல்வேலி. 2) ஜெ. கிறிஸ்டோபர் 16/44, சகாயம் தெரு, புதியம்புத்தூர், மகேந்திரபுரி அஞ்சல், திருநெல்வேலி. 3) இ. சந்திரசேகர் 15/73, வடக்கு ரத வீதி, திருக்குறுங்குடி - 627115, திருநெல்வேலி. 4) எம். ராஜா நிர்மல் கிளாட்சன் 99, புவனேஸ்வரி காம்ப்ளெக்ஸ் இராதாபுரம் மெயின் ரோடு, வள்ளியூர் - 627117, திருநெல்வேலி. 5) அ. இக்னேஷியஸ் பிராங்ளின் 8/5, தெற்கு ரத வீதி, இராதாபுரம், திருநெல்வேலி.

### தஞ்சை வடக்கு மாவட்டம்

தஞ்சை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி துணைத் தலைவராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட பி. விக்னேஷ் அவருக்குப் பதிலாக **எம்.பி. மனோகரன்** , (24, எருத்துக்கார தெரு, மருத்துவக்குடி, ஆடுதுறை - 612101, திருவிடைமருதூர் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்) அவர்கள் தஞ்சை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி துணைத் தலைவராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 12-03-2026

**என்.ஆர்.இளங்கோ, எம்.பி.**
செயலாளர்
தி.மு.க. வழக்கறிஞர் அணி

---

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஜே.எஸ். இராசு

**மார்ச் 15 (2000)**



கழகம் தொடங்கப்பட்டதிலிருந்து உறுப்பினராக தன்னை இணைத்துக் கொண்டவர். ஆரம்பக் காலத்தில் உயர்நிலைப் பள்ளி ஆசிரியராகவும் பணிபுரிந்தவர்.

கழக இதழ்களில் கதை, கட்டுரை, கவிதைகள் எழுதியுள்ளார். தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த எழுத்தாளராகவும் விளங்கியவர். திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழக செனட் உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

தமிழக சட்டப்பேரவைக்கு பெரம்பலூர் தொகுதியிலிருந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் சட்டமன்ற மேலவை, நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

"பெரம்பலூர் பகுதியில் ஆதிதிராவிட சமுதாயத்தில் தோன்றிய இராசு கழகத்தை வளர்த்திட அரும்பாடுபட்டவர். தெளிவான சிந்தனையாளர். தேனருவியெனப் பேசும் சொற்பொழிவாளர். தி.மு.கழகத்தின் மாசுமருவற்ற செயல்வீரர்" எனத் தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

பதப்படுத்தப்பட்ட உணவுகளை நெறிப்படுத்துவதில் தொடர்ந்து தவறும் ஒன்றிய அரசு!

# மக்களின் நல்வாழ்வில் அலட்சியத்துடன் செயல்படுவதா?

## கே.இ.பிரகாஷ் எம்.பி. கண்டனம்!



புதுடெல்லி, மார்ச் 15-

பதப்படுத்தப்பட்ட உணவுகளை நெறிப்படுத்துவதில் தொடர்ந்து தவறும் ஒன்றிய அரசு, மக்களின் நல்வாழ்வில் அலட்சியத்துடன் செயல்படுவதா என எம்.பி. கே.இ. பிரகாஷ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் பதப்படுத்தப்பட்ட உணவுகளின் தரம் மற்றும் பாதுகாப்பை நெறிப்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து, நாடாளுமன்றத்தில் ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்திடம் கேள்வி எழுப்பினேன். இதில், 2024ம் ஆண்டு அறிவிக்கப்பட்ட பதப்படுத்தப்பட்ட உணவு குறித்த தவறான விளம்பரங்களை முறைப்படுத்தும் கமிட்டியின் நிலைபற்றியும் கேட்டிருந்தேன்.

இந்தக் கேள்விகளுக்கு அமைச்சகம் அளித்துள்ள பதில்கள், ஒன்றிய அரசு எவ்வளவு அலட்சியமாக மக்களின் நல்வாழ்வோடு விளையாடிக் கொண்டிருக்கிறது என்பதை வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது.

1. காலாவதிச் சட்டங்களை காட்டி திசை திருப்பும் முயற்சி:

இந்தியாவில் பதப்படுத்தப்பட்ட உணவுகளுக்கான மார்க்கெட் பல லட்சம் கோடி ரூபாயை எட்டியுள்ளது. இதற்கு, புதிய தொழில்நுட்பங்கள், புதிய வகை உணவுகள், புதிய வகை மார்க்கெட்டிங் என, இந்த துறை பன்மடங்கு மேம்பட்டுள்ளதே காரணம். இதன் விளைவாக, இந்த துறையின் மீதான கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டிலும் புதிய சவால்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையில், அவற்றின் தரம் மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்ய தற்போது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் பற்றி கேட்டதற்கு, பல ஆண்டுகளுக்கு முந்தைய பழைய சட்டங்களை ஒன்றிய அரசு காண்பித்துள்ளது. இதன் போதாமைகளை பல வல்லுநர்கள் நிறைய முறை சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

புதிய மேம்படுத்தப்பட்ட கொள்கைகளும் வழிகாட்டுதல்களும் எங்கே?

2. கண்துடைப்பு கமிட்டியை வைத்து நாடகமாடும் ஒன்றிய அரசு:

பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் குறித்து தவறான விளம்பரம் செய்வதை முறைப்படுத்த, 2024ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒரு கமிட்டியை அறிவித்தது ஒன்றிய அரசு. தகுந்த ஆய்வுகளை மேற்கொள்வது, அதன் படி கொள்கைகளை அரசுக்கு பரிந்துரைப்பது, மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது என இதன் நோக்கங்கள் தெரிவிக்கப்பட்டன.

இந்த கமிட்டி அறிவிக்கப்பட்டு ஓராண்டு கடந்துவிட்டது. இதுவரை அது எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்ற கேள்விக்கு, அதன் நோக்கங்களையே வேறு வார்த்தைகளில் சொல்லியிருக்கிறது ஒன்றிய அரசு. இதைமெத்தனம் என்று ஒருவார்த்தையில் மட்டும் சுருக்கிவிட முடியாது. மாறாக, மக்கள் பணத்தை வீணடித்து ஒரு கண்துடைப்பு கமிட்டியை நடத்தும் நாடகச் செயல்.

இந்த கமிட்டி உடனடியாக கலைக்கப்பட வேண்டும் அல்லது அதன் நோக்கங்களை நிறைவேற்ற களத்தில் உண்மையாகவே செயல்பட வேண்டும்.

பதப்படுத்தப்பட்ட உணவுகளை உணவுத்துறையில் ஒரு புரட்சி எனப் பலர் ஏற்றுக் கொண்டாலும், அதன் மீதான தரப்படுத்தலும் பாதுகாப்புமே அவற்றை மக்களுக்கு பயனுள்ள தாக்குகின்றன. இதில் ஒன்றிய அரசு கோட்டைவிடும் ஒவ்வொரு விநாடியும், மக்களின் நல்வாழ்வு கைவிடப் படுகிறது. இனிமேலேனும் தக்க நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டும் என தெரிவித்தார்.



மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம் டெல்லியில் உள்ள ஒன்றிய நிதித்துறை அமைச்சர் நிர்மலா சீத்தாராமனை நேரில் சந்தித்து தமிழ்நாட்டின் சமுதாய வளர்ச்சி பணிகளுக்காக நமக்கு நாமே திட்டத்திற்கு நிறுவனங்கள் வழங்கும் வளர்ச்சிப் பணிகளுக்கான சமுதாய பொறுப்புணர்வு நிதி (CSR) க்கு வரிவிலக்கு வேண்டியும், இரயில்வே உள்ளிட்ட தமிழ்நாட்டின் வளர்ச்சி திட்டங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கவும் வலியுறுத்தினார். அதனை தொடர்ந்து ஒன்றிய இரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ்வையும் நேரில் சந்தித்து தஞ்சை மாவட்டத்தில் இரயில்வே மேம்பாட்டின் ஒரு பகுதியான குட்செட் மற்றும் இருவழி பாதை அமைக்கும் திட்டங்களை விரைந்து முடிக்க வலியுறுத்தி மனு அளித்தார்.